2014 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tower line அமைக்க வேண்டுமானால், அதற்கு வழிமுறைகள் இருக்கின்றன. ஒரு துணை மின் நிலையத்திலிருந்து மற்றொரு துணை மின் நிலையத்திற்கு மின்சாரத்தை அனுப்புவதற்கு Tower line-ஐ பயன்படுத்துவார்கள். ஆனால், நேரடியாக Tower line-லிருந்து மின் விநியோகம் செய்யப்படுவது வழக்கத்தில் இல்லை. இதில் தொழில்நுட்பப் பிரச்சினைகள் எல்லாம் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, Tower line அமைத்து அங்கேயிருந்து நேரடியாக மின் விநியோகம் செய்ய தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, அதற்கு வாய்ப்பு இருந்து, தொழில்நுட்ப ஆய்வுகள் நமக்கு சாதகமாக வருமேயானால், அதைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

தேயிலை விற்பனை

***6756—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் இன்ட்கோசர்வ் (Indcoserve) தேயிலை நிறுவனத்தின் மூலமாக தேயிலை விற்பனையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேயிலை விற்பனையை அதிகரிக்க நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூர் இன்ட்கோசர்வ் தேயிலை கூட்டுறவு

நிறுவனத்தின் மூலமாக ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது. இக்குழு 4 மாதங்களுக்கு ஒருமுறை கூடி, ஊட்டி தேயிலையினுடைய விற்பனை குறித்து பல்வேறு நிறுவனங்கள்மூலம் ஆய்வு மேற்கொண்டுள்ளது. தேயிலை விற்பனையை அதிகரிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அந்தவகையிலே, பசுந்தேயிலையின் விலையை அதிகரிக்கும் வகையிலும், 63,000 தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கிற வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து உதவியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற ஆட்சிக்காலத்திலே தேயிலையின் விற்பனை 2,668 மெட்ரிக் டன்னாக இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தேயிலை விற்பனை அளவை 2012-2013-ல், 3,912 மெட்ரிக் டன்னாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதையும், 2013-2014-ல் ஜனவரி முடிய 10 மாத காலத்திற்கு 43.29 கோடி ரூபாய் அளவிற்கு 3,505 மெட்ரிக் டன்னாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, சென்ற ஆட்சியில், தேயிலை விற்பனை மாதம் ஒன்றுக்கு 214 டன்னாக இருந்தது. இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சராசரியாக 350 டன்னாக உயர்த்தியிருக்கிறார்கள். தேயிலையினுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நஞ்சை நாடு பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்று, அதற்காக 5 கோடி ரூபாய் செலவில் தேயிலை தொழிற்சாலை ஒன்றை அமைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, தேயிலையை உற்பத்தி செய்யும் மாவட்டங்களில் தேயிலைத் தூள் உற்பத்தியாளர்களின் நலனைக் காக்கும் பொருட்டு, கோவை மாவட்டத்தில் சுமார் 15 கோடி ரூபாய் செலவில் தேயிலை குழுமம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அதேபோன்று, தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை விற்பனை சிறப்பாக அமைய மின்னணு தராசுகள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் 50 இலட்சம் ரூபாயைத் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

80—

முதியோர் இல்லம்

***22855—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியில் ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லம் மற்றும் முதியோர் இல்லம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-10

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) 5-9-2012 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதியோர், குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களைத் தன்னுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்தார்கள். அப்படித் தொடங்கி வைத்த திட்டத்தின் அடிப்படையில், வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில், 'சரணாலயம், கருணை இல்லம்' என்ற தொண்டு நிறுவனத்தின்மூலம் ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்பட்டு, 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்களைப் பயனாளிகளாகக் கொண்டு, தற்போது இந்த இல்லம் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*